08 Sep'26

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துல் சமது
https://www.facebook.com/IUMLTNOfficial

POSTED AT EGMORE RMS, PATHRIKA CHANNEL, CHENNAI-600008
RNI 42728/1987 | REGD. No.TN/CNI GPO/080/2026-2028
WPP No. TN/PMG(CCR)/WPP 686/26-28




திருச்சி, ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 06.09.2026 ஞாயிற்றுக்கிழமையன்று சிங்கப்பூர் கிழக்கு கடற்கரை பூங்காவில் ஜமாலியன்ஸ் ஒன்றுகூடும் குடும்ப தின நிகழ்ச்சியை நடத்தியது. மாணவர்களுக்கான போட்டிகள், பெற்றோர்களுக்கான விளையாட்டுகள், டாக்டர் ஹபீப் சகிலா பானு வழங்கிய மருத்துவச் சொற்பொழிவு, அதிர்ஷ்டக் குலுக்கல் பரிசுகள், சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் உள்ளிட்ட அங்கங்கள் இந்நிகழ்ச்சியில் இடம்பெற்றன. கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் குடும்பத்தினர் ஏறக்குறைய 150 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சிங்கப்பூரில் கடந்த 16 ஆண்டுகளாக, கல்விச் சார்ந்த சமூக நலப்பணிகளை ஆற்றி வரும் இச்சங்கம் இதுவரை 156 நிகழ்ச்சிகளை நடத்தி சாதனைப் படைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.